# இரட்சிப்பு
RATCHIPPU

**RATCHIPPU = SALVATION**

Volume-14 | September - 2024 | Issue-04

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-





CHURCH OF SOUTH INDIA

# CSI

## FORMATION DAY

'That, they all may be One' John-17:21

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இந்த ஆண்டின் 9வது மாதத்தை காண கிருபை பாராட்டின தேவாதி தேவனுக்கு துதி தோத்திர பலிகளை ஏறெடுப்போம். 78வது உருவாக்க தினத்தைக் கொண்டாடுகிற தென்னிந்தியத் திருச்சபை அங்கத்தினர், அபிமானிகள், விசுவாசிகள் அனைவருக்கும் எங்கள் அன்பின் ஆண்டுவிழா நல்வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் ஆசிரியர், மாணவர், பெற்றோர் மற்றும் கல்வி நிலையத்தாருக்கு எங்கள் அன்பின் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்.

உயர் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகள், கலந்தாய்வு மற்றும் நேர்காணல்களை முடிந்து புதிய உயர்கல்வி படிப்புகளில் சேருகிற நம் பிள்ளைகளுக்கு அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்; கர்த்தர் தாமே அவர்களுக்கு தேவையான ஞானத்தை கொடுத்து வழிநடத்துவாராக.

நமது ஊழியங்களான ‘ஜெப-ஜன்னல்’ ஜெப நேரங்கள் (ஆகஸ்டு 13, 20, 27), ‘அனைவரும்-ஊழியத்தில்’ - கைபிரதி ஊழிய திட்டம், ‘வேதாகம போட்டிகள்’ ஆகிய வற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் அவற்றை நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (CONTACT-DETAILS, ONLINE வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன). தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-165** **யோவான் - 17:21**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும் படிக்கு; ஆ! பிதாவே நீர் என்னை அனுப்பியதை உலகத்தார் விசுவாசிக்கத்தக்கதாக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயுமிருக்கிறதுபோல அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கும்படிக்கே வேண்டிக்கொள்ளுகிறேன்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

### திருவிவிலியம் (பொது-1995)


அவர்கள் எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)

பிதாவே! என்னை நம்புகிற அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டிக்கொள்கிறேன். நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்; ஆகையால் இவ்வுலகம் நீர் என்னை அனுப்பியதை நம்பும்.


வசன தியானம்-155

# வழிகாட்டும் ஆசிரியர்களா?



Matt-15:14

வழிகாட்டும் குருடர்களா?
யார் நீங்கள்?



மத்-15:14


அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார். மத்-15:14

**வேதபாரகர் மற்றும் பரிசேயர்:** பரிசேயர், வேதபாரகர் ஆகியோர் இயேசுவைப் போல் அல்லாது, தீய-போதகர்களாய் இருந்தனர். இயேசு அவர்களை சகித்துக் கொள்ளவில்லை. அவர்களை குருட்டு வழிகாட்டிகளே, குருட்டு மடையர்களே என விமர்சித்தார். பரிசேயரைப் போல இருக்கவேண்டாம் என சீடர்களை எச்சரித் தார் (மத்-15:14மு). பரிசேயர், தாங்கள் பிரசங்கிப்பதை தாங்களே கடைப்பிடிப்ப தில்லை, அவர்கள் மக்களால் மதிக்கப்பட விரும்பி தங்களை உயர்த்துகிறார்கள். ஆகவே இயேசு, அவர்களை மாயக்காரரே என 7-முறை சபித்தார். ஆசிரியர்-தினம் கொண்டாடும், பெற்றோர், ஆசிரியர், போதகர்களான நம்மை இயேசு சந்தித்தால், நம்மைக் குறித்து என்ன சொல்லுவார்?

**மாணவர்களுக்கும் பாமரருக்கும் நாம் ஆசிரியர்:** மாணவர்கள் அறியா பருவத்தினராய் இருக்கிறார்கள், பாமர மக்கள் வழிகாட்டிக்காக ஏங்குகின்றனர். இவ்விதத்தில் அவர்கள் வழியறியாது நடக்கும் பார்வையற்றோருக்கு ஒப்பாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு ஆசிரியர், பெற்றோர், போதகராகிய நமக்கு உண்டு. நாம் மாணவர்களையும், பாமரரையும் நேர்வழியில் நடத்துகிறோமா? நீதி-நேர்மையை கற்பிக்கிறோமா? சற்றே சிந்திப்போம்.

**இயேசுவின் விருப்பம்:** இயேசுவின் நாட்களில் சுமார் 6000 பரிசேயர் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கமாலியேல், நிக்கோதேமு, அரிமத்தியாவின் யோசேப்பு மற்றும் இயேசு போன்ற ஒருசிலரைத் தவிர மற்றவர் அனைவரும் தீய-ஆசிரியர்களாக இருந்தனர். ஆகவேதான், பரிசேயர்களும், வேத-ஆசிரியர்களும் மக்களை கடவுளிடம் வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும் என இயேசு விரும்பினார். இன்று ஆசிரியர்-பெற்றோராகிய நம்மிடமும் இயேசு அதையே எதிர்பார்க்கிறார். குருடரான வழிகாட்டியைப் பின்பற்றுவது மிகவும் ஆபத்தானது. கடவுளிடமிருந்து விலகி, பிசாசின் இடத்திற்கு நம்மை அவர்கள் அழைத்துச் செல்வார்கள். இப்படிப்பட்டவர்கள் பரலோக இராஜ்யத்தில் நுழையமாட்டார்கள் என இயேசு எச்சரித்தார். (மத்-23:13).

இன்று நாம் யார்? சிறந்த ஆசிரியரா? அல்லது குருடரான வழிகாட்டிகளா? நம்மை நாமே பரிசோதித்து அறிவோம்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



அருட்திரு. ஜான் கிரிதரன்

# 2ம் பெந்தெகொஸ்தே
# தென்னிந்திய திருச்சபை
## உருவாக்க நாள்
## CSI FORMATION DAY
THE SECOND PENTECOST

''அவர்கள் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக'' யோவான்-17:21

**Rev. R. John Giridharan** M.A. B.Ed. B.D
PRESBYTER, GOPALAPURAM, CHENNAI- 86, SOUTH INDIA.

பேரன்பிற்குறிய இரட்சிப்பு வாசகர்களுக்கு திருச்சபையின் தலைவராகிய இரட்சகர் இயேசுவின் திருப்பெயரால் 'தென்னிந்திய திருச்சபை உருவாக்க நாள்' நல்வாழ்த்துக்கள். உலக வரலாற்றில் 2ம் பெந்தெகொஸ்தே என்று அழைக்கப்படும் தென்னிந்திய திருச்சபையின் உருவாக்க நாளை கொண்டாடும் இந்நாட்களில் இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் தென்னிந்திய திருச்சபையின் உருவாக்கம் குறித்து உங்களோடு செய்தி பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**இந்தியாவில் கிறிஸ்தவத் திருச்சபை - வரலாற்றுச் சுருக்கம்:**

கி.பி.52ம் ஆண்டில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவரான தூய. தோமா அடிகளார் இந்தியா வந்து, கேராளாவில் திருவாங்கூரில் திருச்சபையை ஏற்பத்தினார். தோமா அவர்கள் கி.பி.72வரை இந்தியாவில் இறைப்பணியாற்றி, கடற்கரை பகுதியான மலபார் பகுதியில் 7 தேவாலயங்களை கட்டினார். சென்னை வந்து இறைப்பணி செய்தபோது அவர், கிறிஸ்தவ சமய எதிர்ப்பாளர்களாய் இருந்த பிராமணர்களால் ஈட்டியால் குத்தி கொலை செய்யப் பட்டார். அவர் படுகொலை செய்யப்பட்ட இடம்தான் இன்று தூய. தோமா மலைப்பகுதி எனப்படுகிறது (St. Thomas Mount). மட்டுமல்ல, சாந்தோம் ரோமன் கத்தோலிக்க பேராலயத்தில் அவருடைய கல்லறை இன்றும் உள்ளது.

கி.பி.2ம் நூற்றாண்டில் சிரியா போன்ற கிழக்கத்திய கிறிஸ்தவ நாடுகள் இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் பணிகளில் ஈடுபட்டன.

கி.பி.14-ம் நூற்றாண்டில் போர்த்துகீசியர் இந்தியாவுக்கு வந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டனர் (கத்தோலிக்க திருச்சபைகள்).

கி.பி.17-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய திருச்சபைகள் இந்தியாவுக்கு வந்து நற்செய்தியை பரப்பியதின் பயனாக இந்தியாவில் சீர்திருத்தச் திருச்சபைகள் (Protectant Church) ஏற்படுத்தப்பட்டன. சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத்

தலைவரான டாக்டர். இராஜேந்திர பிரசாத் அவர்கள் 1955-ல் கூறும்போது, ‘‘ஐரோப்பிய நாடுகள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாகவே, தூய. தோமா அவர்கள் இந்தியாவுக்கு வந்து, இங்கு கிறிஸ்தவத்தை தோற்று வித்திருக்கிறார். ஆகவே, ஐரோப்பியர் இந்தியாவில் கிறிஸ்தவத்தை தோற்றுவிக்க வில்லை. அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னதாகவே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இருந்தனர்’’ என்று குறிப்பிடுகிறார்.

கி.பி.1706-ல் ஜெர்மானிய திருத்தொண்டரான சீகன்பால்கு என்பவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடிக்கு வந்தார். இந்தியாவுக்கு வந்த முதல் சீர்திருத்தச் திருச்சபையின் திருத்தொண்டர் இவர்தான். இவர் இந்தியாவின் முதல் சீர்திருத்தத் திருச்சபையை தரங்கம்பாடியில் நிறுவினார். கி.பி.1711ல் முதல் தமிழ் புதிய ஏற்பாட்டை அச்சேற்றினார். ஆசியாவின் முதல் வேதாகம மொழிபெயர்ப்பு இதுதான். ஆசியாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட முதல் முதல் புத்தகமும் இதுதான். இதன்பிறகு, அநேக திருச்சபை மரபுகளைச் சேர்ந்த திருத்தொண்டர்களும் இறைமக்களும் பல சீர்திருத்தச் திருச்சபை பிரிவுகளை உருவாக்கினர்.

கி.பி.19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய திருச்சபைகளின் இந்த பிரிவுகள் நீக்கப்பட்டு திருச்சபைகளின் ஐக்கியத்திற்கான தேவை உணரப்பட்டது. ஐக்கியத் திற்கான முயற்சிகளில் திருச்சபைத் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர்.

அதன் தொடர்ச்சியாக கி.பி.1900வது ஆண்டில் மிஷனரி பத்தாண்டு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் ‘தேசிய திருச்சபை’ (Native Church) உருவாக்கத்திற்கான தீர்மானம் வலியுறுத்தப்பட்டது.

கி.பி.1901ல் மூப்பர்கள் இணைந்து மூப்பர் ஆளுகை சபையான பிரஸ்பைடெரியன் கூட்டமைப்பை (Presbytarian Alliance) ஏற்படுத்தினர்.

கி.பி.1905ல் இந்தியாவில் சபை ஆளுகை சபைகள் (Congregational Church) இணைந்து ஒன்றுபட்டன.

கி.பி.1908-ல் மூப்பர் ஆளுகை சபை (Presbytenian Church) மற்றும் சபை-ஆளுகை சபை (Congregational Church) ஆகியவை இணைந்து ‘சௌத் இண்டியா யுனைடட் சர்ச்’ (South India United Church) எனப்படும் ‘SIUC’ திருச்சபைக் கூட்டமைப்பு உருவானது.

கி.பி.1919-ல் லுத்தரன், ஆங்கிலிக்கன், SIUC மற்றும் மெதடிஸ்ட் சபைகளில் 33 இந்திய கிறிஸ்தவ ஆயர்களிருந்தனர். இவர்களில் 31பேர் தரங்கம்பாடியில் கூடி ‘தரங்கை அறிக்கை’ எனப்படும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். அதன்படி, ‘‘அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், தந்தையே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்’’ (யோவான்-17:21) என்ற இயேசுவானவரின் ஜெபத்தில் இருந்து எடுக்கப்பட்ட, ‘‘**அவர்கள் ஒன்றாயிருப்பார்களாக**’’ என்ற ‘தரிசன

வசனம்' உருவாக்கப்பட்டு, திருச்சபை இணைப்புக்கான முயற்சிகள் தொடங்கப் பட்டு அதில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டது. 'தரங்கை அறிக்கை' வெளியிட்டவர்களில், ஆயர்கள் வி.எஸ். அசரியா, வி. சந்தியாகு, ஹெச்.ஏ. பாப்பிலி மற்றும் ஜி.எஸ். எடி ஆகியோர் தலைமை ஏற்று திருச்சபை இணைப்பு முயற்சிகளில் பெரும்பங்காற்றினர்.

28-ஆண்டுகள் நடந்த தொடர் கலந்தாய்வுக்குப் பின் கி.பி. 1947ம் ஆண்டு செப்டெம்பர் 27ம் நாள் ஆங்கிலிக்கன், எஸ்.ஐ.யூசி, மெதடிஸ்ட் சபைகள் இணைந்து தென்னிந்திய திருச்சபை உருவாக்கப்பட்டது. 27-09-1947 அன்று சென்னை தூய. ஜார்ஜ் பேராலயத்தில் தொடக்க வழிபாடு நடைபெற்றது. அருட்திரு. J.S.M. ஹூப்பர் அவர்கள், ''ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய் இருந்து, அப்போஸ்தலர் தீர்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே-2:19-22) என்னும் வசனங்களைக் கொண்டு அருளுரை வழங்கினார். **'தென்னிந்தியத் திருச்சபை'** புதிய திருச்சபையாக உதயமானது.

**C.S.I சின்னம்:**


C.S.I இலச்சினையிலுள்ள சிலுவையின் சம அளவு கொண்ட 4-புயங்கள், இணைந்த சபைகளின் சமத்து வத்தைக் குறிக்கிறது. இந்திய தேசிய மலரான தாமரை, இந்திய கலாச்சாரத்தை உறிஞ்சி திருச்சபை வளர வேண்டும் என்பதைக் குறிக்கிறது. கொழுந்துவிட்டு எரியும் ஜுவாலை, திருச்சபையின் மீதுள்ள தூய ஆவி யானவரின் ஆற்றலைக் குறிக்கிறது. 'எல்லாரும் ஒன்றாக இருப்பார்களாக' (யோவா-17:21) என்ற திருமறை வசனம், திருச்சபையானது கடவுளின் வார்த்தையை மேன்மைப்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**C.S.I திருச்சபையின தரிசனம்:**

பெருகிடும் அமைதி (ABUDANT GRACE), இசைத்திடும் ஐக்கியம் (GREATER FELLOWSHIP), நிறைந்திடும் வாழ்வு (FULLNESS OF LIFE) என்ற இலக்கினை அடைய இறை ஆற்றலோடு திருச்சபையானது இயங்கவேண்டும் என்பது திருச்சபையின் தரிசனமாகும். தென்னிந்திய திருசசபையின் அங்கமாக இருப்பதை எண்ணி நாம் பெருமை கொள்ளவேண்டும். வாழ்க தென்னிந்திய திருச்சபை! வருக இயேசுவின் இசையரசு!

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு.ஆர். ஜான் கிரிதரன்**

வேத ஆராய்ச்சி - 88



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் – 88

EPISODE-88

**முன்னுரை:**

இந்த சங்கீதம் மற்ற சங்கீதங்களில் இருந்து மிகவும் மாறுபட்ட ஒன்று. இது முழுவதும் ஆழமான துக்கம், தனிமை. இருள், நம்பிக்கையின்மை மற்றும் தேவனிடமிருந்து விலகி இருப்பதாக உணரும் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு பாடலாக அமைந்துக்ளது. மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட, நம்பிக்கையை இழக்காமல், தேவனிடம் நமது தேவைகளை முறையிட வேண்டும் என்பதை நமக்கு கற்றுத்தரும் காவியம் இது.

**1. ஆழமான துக்கம்:** (வச-3)

“என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது”

சங்கீதக்காரர் இங்கு, தான் அனுபவிக்கும் துக்கத்தை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறார். இருளின் அனுபவம் மற்றும் மரணித்தவர்களை பற்றி குறிப்பிடுகிறார். அவர் தன்னைச் சுற்றியுள்ள இருள் மற்றும் ஆழமான துக்கம் பற்றி விவரிக்கிறார். நமது வாழ்விலும் இத்தகய அனுபவங்கள் நிறைய உண்டு அல்லவா? மனித வாழ்வு மலர் படுக்கையல்ல அது முட்கள் நிறைந்த ஒரு பாதை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பிரச்சனைகள் நம்மை சூழ்ந்து கொள்ளும்பொழுது வாழ்வின் விளிம்பிற்க்கே வந்துவிட்டதைபோல உணருகிறோம். துக்கம் நமது நெஞ்சை அடைப்பதால் பல சரீர உபாதை களையும் அடைகிறோம். இந்த அனுபவத்தை இச்சங்கீதத்தில் மிகவும் உணர்ச்சியோடு ஆக்கியோன் வெளிப்படுத்துகிறார்.

**2. தனிமை:** (வச 18)

“சிநேகிதனையும் தோழனையும் எனக்குத் தூரமாக விலக்கினீர்; எனக்கு அறிமுகமானவர்கள் மறைந்து போனார்கள்”.

சங்கீதக்காரர் தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் தன்னை விட்டுச் சென்றதாக உணர்கிறார். தமது தனிமையையும் மற்றவர்களால் தள்ளப்பட்ட உணர்வையும் வெளிப்படுத்துகிறார். மனித வாழ்க்கையின் மிக முக்கியமான பாகங்களான உறவுகளின் இழப்பு மிகக் கனமான துக்கத்தை உருவாக்கும்.

ஆம் நண்பர்களே! எத்தனை முறை நாமும் இத்தகைய அனுபவங்களுக்கு ஊடாக சென்றிருக்கிறோம். நமது பணம், புகழ், பதவி, அந்தஸ்து, பெருமை,

என நாம் நமது உயர்நிலையில் இருந்தபோது நமக்கு அருகாமையில் இருந்த பலர் இன்று நம்மை விட்டு வெகுதொலைவில் இருப்பது எதார்த்தம் அல்லவா? வாழ்க்கையில் தனிமையை அனுபவிக்கும் எவரையும் சிந்திக்க வைக்கும் அற்புதமான பாடல் இச்சங்கீதம்.

**3. தேவனிடமிருந்து விலகி இருப்பதாக உணருதல்:**(வச-16)

‘‘உம்முடைய எரிச்சல்கள் என்மேல் புரண்டுபோகிறது; உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம்பண்ணுகிறது’’.

தேவன் தன்னை விட்டு விலகிச் சென்றதாக சங்கீதக்காரர் உணர்கிறார். அவர் தேவனிடம், ‘‘ஏன் என்னை விட்டுச் சென்றீர்?’’ என்று கேட்கிறார்.

இது, வாழ்க்கையின் மிகக் கடினமான நேரங்களில் நாம் அனுபவிக்கும் மன அழுத்தங் களை வெளிப்படுத்துகிறது. ‘‘உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது; உம்முடைய அலைகள் எல்லாவற்றினாலும் என்னை வருத்தப்படுத்துகிறீர்.’’ (வச-7) என, சங்கீதக்காரர் கடவுளின் அமைதியால் தன் வேண்டுதல்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்ற உணர்வை வெளிப்படுத்துகிறார்.

**4. தேவனை நோக்கிய அழுகை:**(வச-13,14)

‘‘நானோ கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; காலையிலே என் விண்ணப்பம் உமக்கு முன்பாக வரும். கர்த்தாவே, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர்? ஏன் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர்?’’

இங்கு சங்கீதக்காரர், தேவனை நோக்கி அழுகிறார். அவர் தேவனின் உதவியை வேண்டுகிறார். தனது துக்கத்தின் ஆழத்தையும், தேவனிடமிருந்து விலகி இருப்பதாக உணரும் உணர்வுகளையும் வெளிப்படுத்தினாலும், அவர் இறுதியில் தேவனிடமே திரும்புகிறார். இது நம்பிக்கையின் ஒரு வலுவான உதாரணமாகும்.

**முடிவுரை:**

இச்சங்கீதம் மனித இயல்பின் இருளான பகுதிகளை வெளிப்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கவிதை. இது, துக்கம், தனிமை மற்றும் தேவனிடமிருந்து விலகி இருப்பதாக உணரும் உணர்வுகளை அனுபவிக்கும் எவரையும் தொடும் திறன் கொண்டது. மட்டுமல்ல, தேவனிடம் நெருங்கி வருவதற்கு மனுக்குலத்துக்கு கொடுக்கப்படும் ஒரு அழைப்பும் ஆகும்.

இது, கடினமான சூழ்நிலைகளில் கூட, நம்பிக்கையை இழக்காமல், தேவனிடம் முறையிடுவதற்கான ஒரு வலுவான மாதிரி. நம்முடைய துன்பங்களை எவ்வாறு கடவுளின் முன்னால் நாம் கொண்டுவர வேண்டுமென்று இதன் வழியாய் நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் சோர்வாக இருக்கும்போது கூட கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டும் என்பதை இது நமக்கு உணர்த்துகிறது.

தேவன் எப்போதும் நம்முடன் இருக்கிறார், அவருடைய கிருபை எல்லா நேரங்களிலும் நம்மைச் சுற்றி இருக்கிறது என்பதை இச்சங்கீதத்தின் வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. எனவே, தேவனிடம் நெருங்கி வருவதற்கான ஒரு அழைப்பாகும் இச்சங்கீதம்.

கடவுள் தாமே துன்பத்தின் ஊடாய் கடந்து செல்லும் உங்களது நம்பிக்கையை மற்றும் இறைப்பற்றுறுதியை பெருகச்செய்து தமது ஆனந்தத்தால் நிறைப்பாராக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

## ஜெப-ஜன்னல் நன்றி பலிகள்

**தேவனுக்கு நன்றி சொல்வோம் - Come! Let us all thank God**

கோயம்புத்தூரிலிருந்து திருமதி. ஆலிவ் ஜெயபாலன்: கடந்த ஆகஸ்டு 1ம் தேதி வீட்டில் இருந்தபோது உடல் பெலவீனம் காரணமாக நிலைதடுமாறி மல்லாந்த நிலையில் தரையில் விழுந்த என்னை எந்த சேதமும் இல்லாமல் பாதுகாத்த நம் ராஜாதி ராஜன் இயேசுவுக்கு அனந்த கோடாகோடியாய் நன்றி பலிகளை செலுத்துகிறேன். அல்லேலூயா. ஆமென்.

## ஜெப-ஜன்னல் ஆன்மாஞ்சலி

**ஆத்தும அமைதிக்காக ஜெபிப்போம் - குடும்ப ஆறுதலுக்காக ஜெபிப்போம்**

1. திரு.V. ஞானராஜ் (வயது 72), VGR கார்டன், பண்ணூர், திருவள்ளூர் மாவட்டம். நமது ஊழிய இயக்குநரின் சக-சகோதரர், CSI திருச்சபை மற்றும் IMS, FMPB போன்ற மிஷனரி ஊழியங்களுக்கு அதிகமதிகமாக ஆதரவளித்த சகோதரர். சுகவீனம் காரணமாக 14/08/2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அன்னாரது ஆத்தும இளைப்பாறுதல் மற்றும் அவர்களை இழந்துவாடும் குடும்பத்தாரின் ஆறுதலுக்காக கருத்துடன் ஜெபித்திடுவோம்.

2. திரு.T. ராஜ்குமார் (வயது 22) WATRAP, விருதுநகர். நமது ஊழிய ஆதரவாளரான சகோ. அருள்செல்வி அவர்களின் 2வது மகன். B.SC. (CATERING) படித்து சென்னை, HOTEL HUTTAHவில் பணியாற்றியவர். 15/07/2024 அன்று ரயில் விபத்தில் கர்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரது ஆத்தும இளைப்பாறுதல் மற்றும் இளம் வயது மகனை இழந்து தாங்கொணா துக்கத்திலுள்ள குடும்பத்தாரின் ஆறுதலுக்காக கருத்துடன் ஜெபித்திடுவோம்.

## 'அனைவரும் ஊழியத்தில்'

ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

**இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு**

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை **கடிதம்** அல்லது **வாடஸ்-அப்-ல்** எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை–93, தென்னிந்தியா

# வேதாகம போட்டி–166 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) அன்பு சுதந்திரம் (திலி)
4) ஏஞ்சல் சி. (திலி)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
8) அன்னாள் ஜெபக்கனி (கோய)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அனிதா ஜாண் (கோய)
11) அரோமா சாத்ராக் (திலி)
12) ஆர்தர் மாசில்லாமணி (சென்)
13) அருள்செல்வி (விரு)
14) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
15) பாமா மாதவன் (ஆபி)
16) பெல்சி தங்கராஜ் (சென்)
17) பெனிட்டா பிராங்க்ளின் (சென்)
18) பியூலா ஜேசுராஜன் (பாண்)
19) பியூலா ராஜசெல்வன் (கோய)
20) செலினா பென்சி வில்சன் DR. (குவை)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சந்திரா மேரி விஜயன் (பெங்)
24) சந்திரா சாமுவேல் (திலி)
25) சார்லஸ் ஃபின்னி DR (சென்)
26) சார்லஸ் சாலமோன் GP.CAPT (புனே)
27) சார்லட் டேவிட் (சென்)
28) சித்ரா பெஞ்சமின் (திளு)
29) கிறிஸ்டல் ஜாய் யோபு (திநூ)
30) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் (திலி)
32) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
33) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் (தூத்)
34) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
35) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
36) சிந்தி ஜோஷ்வா (தஞ்)
37) டெய்ஸி பில்பா (மும்)
38) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
39) டெய்ஸி சாம் (ஆபி)
40) டேனியல் தாமஸ் (திலி)
41) டேனிங் சொர்ணா ஜெஸ் (திலி)
42) டேவிட் ஜே.ஆர். (சென்/கோய)
43) தெபோராள் டி. (சென்)
44) டெல்வின் இம்மானுவேல் (கோய)
45) தேவமணி ஆபிரகாம் (தூத்)
46) தேவநேசம் ராஜாசிங் (சென்)
47) டோராபாய் (சென்)
48) எபநேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
49) எலிசபெத் செல்லத்துரை (சென்)
50) எமிமாள் மில்டன் (சென்)
51) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
52) எஸ்தர். டி.ஆர். (திலி)
53) எஸ்தர் ஜேஸ்பர் (கோய)
54) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. (சேல)
55) குளோரி ரவீந்திரன் (திலி)
56) ஞானம் ஜெபராஜ் (திலி)
57) ஞானம் பிலிப் (கோய)
58) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
59) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
60) கோல்டா ஜேசுபாதம் (மும்)
61) கிரேஸ் டேனி (தென்)
62) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
63) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
64) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
65) கிரேஸியா ஜெயபால் (சென்)
66) கிரிசெல்டா செய்லர் (சென்)
67) குணவதி ஜெபமணி (சென்)
68) ஹெலென் ஜான்சிராணி (திலி)
69) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
70) ஹெலன் திலக் (தூத்)
71) ஹேமா அஜீத் (சென்)
72) ஹேமா கேப்ரியேல் (பெங்)
73) ஹெப்சி அசரியா (பாண்)
74) ஹெப்சிபா மங்களராஜ் (திலி)
75) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
76) இளவரசி ஜோபிதா (கோய)

77) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
78) இந்திரா கெத்ஸி டேவிட் DR. (திலி)
79) ஜமீலா செல்வராஜ் (சென்)
80) ஜேன் தர்மராஜ் (திலி)
81) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
82) ஜான்ஸி ரோஸ்மேரி (திலி)
83) ஜான்ஸி சந்தியா (திலி)
84) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
85) ஜெபா ஜெயராஜ் (சென்)
86) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
87) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
88) ஜெபசீலி கிளின்டன் (சென்)
89) ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
90) ஜெமீலா நிக்ஸன் (சென்)
91) ஜெனிலா (சென்)
92) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
93) ஜெனிட்டா ஹெலென் (கோய)
94) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் (தர்)
95) ஜெனித்தா செல்வின் (திலி)
96) ஜெரின் ஸ்டீபன் (மும்)
97) ஜெஸி செல்லதுரை (கோய)
98) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
99) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
100) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
101) ஜெயசெல்வி முத்துராமன் (திலி)
102) ஜோனா ஸ்டீபன் AVD
103) ஜோஸ்பின் ஜெஸி (சென்)
104) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
105) ஜுலியட் ஜெபா (சென்)
106) ஜுலியட் ஜெயக்குமார் (திலி)
107) கலா கிருபாகரன் (திலி)
108) கலையரசி செல்வராஜ் (சென்)
109) கஸ்தூரி எலியாஸ் (திலி)
110) கிருபாவதி எஸ். (சென்)
111) கோயில்பிள்ளை ஞானத்தாய்(தென்)
112) லதா மைகேல்ரா(சென்)
113) லீலா டேவிட் (சென்)
114) லீலா ஜோஸப் (கோய)
115) லில்லி ஜாண்ஸன் (சென்)
116) லிஸி டென்சிங் (திலி)
117) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) (அரி)
118) மல்லிகா வி. (சென்)
119) மரிய பாப்பா (சென்)
120) மரியாள் ஜே.எஸ். (தூத்)
121) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
122) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
123) நேச மாலா பீட்டர் (திலி)
124) நகோமி நிர்மலா (சென்)
125) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
126) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
127) பாக்யபாய் ஆரோன் (திலி)
128) பத்மாவதி ஜஸ்டின் (அமெ)
129) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
130) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
131) பொன்மணி உத்தமசிங் (தூத்)
132) பிரேமா ஜானி (தென்)
133) பிரேமா ஸ்டாலின் (சென்)
134) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
135) பிரின்ஸ் தயாநிதி (சென்)
136) பிரின்ஸ்லின் ஷைனி (தென்)
137) பிரிசில்லா தாஸ் (சென்)
138) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
139) ரேச்சல் கனகராஜ் (கோய)
140) ராஜபிரமீளா (திதூ)
141) ராஜகுமாரி சன்னியாசிமுத்து (தூத்)
142) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
143) ரமோலா அதிசயராஜ் (திலி)
144) ராணி ஃபுளோரா (தென்)
145) ராணி பிரபாகர் (திலி)
146) ராணி சாமுவேல்ராஜ் (சென்)
147) ரத்னாவதி பாண்டியன் (சென்)
148) ரோஸ்லின் மார்கிரெட் (சென்)
149) ரோஸி ஸ்டீபன் (சென்)
150) ரூபவதி நோபிள் (திலி)
151) ரூத் (ஹேப்) (திசி)
152) ரூத் ஜாண்ஸன் (திலி)
153) சலோமி மனோகர் DR. (சென்)
154) சங்கீதா ஜெனிஸ் (திலி)
155) சாமுவேல் டேவிட் (திதூ)
156) சாரா பாலசிங் (மது)

## வேதாகம போட்டி–166 சரியான பதிலளித்தோர் – 11ம் பக்கத் தொடர்ச்சி

157) சரோஜா செல்வராஜ் (சென்)
158) சரோஜினி எலிசபெத் (சென்)
159) சீலியா டி. (தென்)
160) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
161) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
162) செல்வராஜ் K. (கோய)
163) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
164) செல்வி எஸ். (சென்)
165) செல்வி அமிர்தராஜ் (திளு)
166) ஷாலி எடிசன் (சென்)
167) சாந்தி ஆல்பர்ட் (தென்)
168) சாந்தி ஜெயசீலன் (சென்)
169) ஷர்மிளா செல்வராஜ் DR. (கட)
170) ஷீபா சாம்ஸன் (சென்)
171) ஷீலா இஸ்ரேல் (திசி)
172) சில்வியா ஃபின்னி DR. (சென்)
173) சவுந்தரம் சாலமோன் (சென்)
174) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
175) ஸ்டெல்லா கனகராஜ் (சென்)
176) சுகிர்தா ஆல்வின் (சென்)
177) சுகிர்தா சின்னதுரை (திலி)
178) சுஜாதா சாமுவேல் (சென்)
179) சுமித்ரா பி. (சென்)
180) சுசீலா தியோடர் (திசி)
181) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
182) தனசீலி ஞானராஜ் (சென்)
183) தெல்மா ஸ்டேன்லி (மது)
184) வனஜா ஹெர்பர்ட் (திலி)
185) வசந்தா அன்பன் (திலி)
186) வசந்தா சந்திரசேகர் (கோய)
187) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி) (திசி)
188) வசந்தி கருணாகரன் (சென்)
189) வசந்தி வாசன் (சென்)
190) விஜயராணி ஏ. (சென்)
191) விஜி டேனியல் (செங்)
192) விமலா ஜெயக்குமார் (தூத்)
193) விண்ணரசி ரோஸ் (சென்)
194) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
195) வினோலியா வில்சன் (திதூ)
196) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
197) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகமப் போட்டி-165 சரியான பதிலளித்தோர்

1) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட்
2) கிரேனா அன்புரோஸ்
3) லீலா டேவிட்
4) செல்வ பென்சி ஆபேல்

## வேதாகம போட்டி–166 சரியான விடைகள்

**(விலேமோன் முதல் யாக்கோபு வரை வரை)**

1. யூதா கோத்திரத்தாரின் எபி:-7:14
2. பயிரிடுகிறவன் யாக்:-5:7
3. பாவஞ்செய்தவர்கள் எபி:-3:17
4. நீதியாகிய கனி யாக்:-3:18
5. நீதிமான் யாக்:-5:16
6. துன்பத்தில், மகிழ்ச்சியில் யாக்:-5:13
7. ஒநேசிமு பிலே:-1:10
8. நீதியின் வசனத்தில் எபி:-5:13
9. சரி - எபி:-10:37
10. சரி - எபி:-13:1
11. சரி - யாக்:-3:8
12. தவறு - எபி:-6:16
13. ஈ - விசுவாசம் எபி:-11:1
14. இ - இருமனமுள்ளவன் யாக்:-1:8
15. ஆ - நியாயப்பிரமாணம் எபி:-7:12
16. அ - சந்தோஷமாய் எபி:-12:11
17. மெல்கிசதேக்கு எபி:-7:1-8
18. வானங்கள் எபி:-1:10-14
19. நாவு யாக்:-3:3-8
20. ஆபிரகாம் எபி:-11:8-10

# வேதாகம போட்டி-167

## வேத–பகுதி: 1,2 பேதுரு, 1,2,3 யோவான் மற்றும் யூதா நிருபங்கள்

**வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்க கடைசிநாள்: 25–09–2024**

1. நமக்கு பாவமில்லையென்று சொல்லி நம்மை நாமே வஞ்சித்தால், நமக்குள் என்ன இராது?

2. எல்லாராலும் நற்சாட்சிபெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சிபெற்றவன் யார்?

3. நியாயத்தீர்ப்பு யாருடைய வீட்டிலே துவக்கும் காலமாயிருக்கிறது?

4. ஏற்றகாலத்தில் கடவுள் உயர்த்தும்படிக்கு, நாம் எதற்குள் அடங்கியிருக்க வேண்டும்?

5. தம் ஜனத்தை எகிப்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்த கர்த்தர் யாரை அழித்தார்?

6. நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம்; உலகம் முழுவதும் யாருக்குள் கிடக்கிறது?

7. ‘ஒருகாலத்திலும் இது மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை’ அது என்ன?

8. நாம் பாவம் செய்யவில்லையென்று சொல்லி கடவுளை பொய்யராக்கினால் நமக்குள் என்ன இராது?

9. ‘உலகமும் அதின் மச்சமும் ஒழிந்துபோம்’ - **சரியா தவறா**?

10. ‘கர்த்தருடைய நாள் பகலிலே திருடன் வருகிற விதமாய் வரும்’ - **சரியா தவறா**?

11. ‘பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்’ - **சரியா தவறா**?

12. ‘உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்’ - **சரியா தவறா**?

13. ‘**இவரின்**’ உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிறவன் தேவனை உடையவனல்ல:
அ) மோசேயின் ஆ) கிறிஸ்துவின் இ) ஆசாரியரின் ஈ) தீர்க்கத்தரிசியின்

14. ‘**இது**’ இல்லாதவன் தேவனை அறியான்:
அ) அன்பு ஆ) பரிசுத்தம் இ) விசுவாசம் ஈ) தேவபக்தி

15. பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசி ‘**இவருடைய**’ மதிகேட்டைத் தடுத்தது:
அ) ஆசாரியரின் ஆ) பிரதானியின் இ) கண்காணியின் ஈ) தீர்க்கத்தரிசியின்

16. பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் ‘**இதில்**’ பூரணப்பட்டவன் அல்ல:
அ) அறிவில் ஆ) கிருபையில் இ) விசுவாசத்தில் (ஈ) அன்பில்

17. பேச்சுக்கு கீழ்-படியவில்லை, பேழையில் நாங்கள் ஏறவில்லை!
பிரசங்கம் கேட்கவில்லை, பிரளயத்தில் நாங்கள் பிழைக்கவில்லை!
பிரசங்கிக்க ஓடிவந்தார், பிராண-நாதர் எமை தேடிவந்தார்! **நாங்கள் யார்?**

18. வேதத்தில் உள்ளது, வேறு பொருளை உடையது!
மனித நினைவின் பேச்சு அல்ல, மா-தூய ஆவியின் பேச்சு! **இது என்ன?**

19. மேலே மூணு சாட்சி, உயிர்-அளிக்கும் ஒற்றுமை சாட்சி!
கீழே மூணு சாட்சி, உயிர்-அடையும் ஒற்றுமை சாட்சி! **3ம், 3ம் ஆறு யாவை?**

20. முதன்மை நிலைச் சம்மனசு! முனிவர்-மோசே உடலை மறைத்த சம்மனசு!
சாத்தானிடம் வாதிட்ட சம்மனசு! சாத்தானை சபிக்காத சம்மனசு! **சம்மனசு யார்?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-09-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ்,
எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-64

பாகம்-64



SIS.C. ANGEL

அவருடைய காருண்யம் எத்தனை பெரியது? அவருடைய சௌந்தரியம் எத்தனை பெரியது?. சக–9:17

FOR HOW GREAT IS HIS MERCY! AND HOW GREAT IS HIS BEAUTY! ZEC-9:17

GOD OF MERCY RACHANNIM ELOHIM

## காருண்ய நாதர்

**‘ரச்சான்னீம் ஏலோஹீம்’**

தமது தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் தமது பிள்ளைகளைப் பதித்து அழகுபடுத்துகிற காருண்ய தேவனின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு செப்டம்பர் மாத கீர்த்தியின் வாழ்த்துக்கள்.

**2பேது-1:3** தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையால் நமக்குத் தந்தருளின தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

காருண்யம் என்றால் அவரது தயை. கர்த்தர் நம் பட்சம்; கர்த்தரின் FAVORITE நாம். தேவ-பாதுகாப்பு நமக்கு உண்டு.

**சங்-33:5** பூமியானது கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருப்பது போல நம்மையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

**சங்-5:12** காருணியம் என்னும் கேடகத்தினால் நம்மை சூழ்ந்துகொள்கிறார்.

**2சாமு-22:36** தமது இரட்சிப்பின் கேடகத்தை நமக்குத் தந்து, காருணியத்தினால் பெரியவனாக்குகிறார். எந்த தகுதியும் இல்லாத, எவருடைய ஒத்துழைப்பும் கிடைக்காத நபரைத்தான் தம் கரத்தில் எடுத்து உருவாக்குகிறார்.

இனி எழும்ப முடியாது. இனி வாழ வழியில்லை என்ற நிலைமையில் இருப்பவரைத் தான் கர்த்தரின் அழகான கண்கள் காண்கின்றன. இதற்கு நாமே சாட்சி.

**ஜெபம்:** வெண்மையும் சிவப்புமானவரே! உமக்கு ஸ்தோத்திரம். சேனையானது புறப்படும்போதும், திரும்பி வரும்போதும் என் ஆலயம் காக்கப்படும்படி அதைச் சுற்றிலும் பாளையம் போடுவேன், இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்துவருவதில்லை; அதை என் கண்களினாலே பார்த்துக்கொண்டிருக்கிறேன் (சக-9:8) என்று வாக்களித்த வசனங்களை இயேசுவின் நாமத்தில் சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ. C. ஏஞ்சல் B. Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-160•

# சிறந்த மிஷனரி ஆயுதம் ஜெபமே

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

சர்ச்-ஆப்-ஸ்காட்லாந்தின் ஒரு திருச்சபையார், ஒரு பெரிய மிஷனரி இயக்கத்தின் வாயிலாக, ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள காட்டுமிராண்டிகள் மத்தியில் ஊழியம் செய்ய மிஷனரிகளை அனுப்ப விரும்பினர். கர்த்தருக்கு பயந்த ஒரு தம்பதியர் ஊழியத்துக்கு செல்ல தங்களை அர்ப்பணிக்கவே, அவர்களை ஜெபத்துடன் தேர்ந்தெடுத்து, ‘சபையாக, நாங்கள் இடைவிடாமல் உங்களுக்காக ஜெபிப்போம்’ என வாக்களித்து, அவர்களை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பிவைத்தனர். மிஷனரிகள் ஆப்பிரிக்கா சென்று பணிகளை தொடங்கினர் ஆனால் ‘ஜெபிப்போம்’ என வாக்களித்த சபையாரோ தங்கள் வாக்குறுதியை மறந்தனர்; மிஷனரிகளுக்காக ஜெபிக்கவில்லை.

நாட்கள் கடந்தன, ஆப்பிரிக்கா சென்ற மிஷனரியின் மனைவி நோய்வாய்ப்பட்டு, வியாதியின் கடுமையால் மரித்துப்போனார். எனினும் மிஷனரி-கணவர் சில காலம் தனி மனிதனாக ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்தார்; ஆனால், அவரால் ஊழியத்தை சரிவர செய்ய இயலவில்லை. சோர்வுற்ற அந்த மிஷனரி ஸ்காட்லாந்து திரும்பி, தங்களை அனுப்பிய சபையாரை சந்தித்தார். ஜெபக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட போது அந்த சபையார் தனக்காகவும் தனது மனைவிக்காகவும் ஜெபிக்கவில்லை என்பது அவருக்குத் தெரியவந்தது. இதுகுறித்து விசுவாசிகளிடம் கூறி மனம் வருந்தினார்.

நடந்தது என்ன தெரியுமா? மிஷனரியின் வார்த்தைகளைக் கேட்ட சபையாரின் உள்ளம் உருகியது; அனைவரின் இதயங்களும் நொறுகின. தங்கள் தவறுக்கு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டனர். பின்னர் அவர்கள் பாரத்தோடு ஜெபிக்கும் ஜெபவீரர்களாக மாறினர். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் மிஷனரி ஊழியங்களை அபரிமிதமாக ஆசீர்வதித்தார். கோடிக்கணக்கான ஆப்பிரிக்க மக்களை இயேசுவண்டை வழிநடத்தும் கருவியாக அந்தத் திருச்சபை மாறியது.

பிரியமானவர்களே! நாமும் ஜெபிக்கவேண்டிய அநேக காரியங்களுக்காக ஜெபிக்காமல் இருக்கிறோம்; குறிப்பாக, வடஇந்தியாவில் நடைபெறும் மிஷனரி ஊழியங்களுக்காக ஜெபிப்பதில்லை. பல மாநிலங்களில் மிஷனரிமார், அடர்ந்த காடுகளில் காட்டுமிராண்டிகள் மத்தியில் தங்கள் உயிரை பணயம் வைத்து, அம்மக்களுக்கு இயேசுவை அறிவித்து வருகின்றனர். நமது ஜெபம் மட்டுமே மிஷனரிகளுக்கு பாதுகாப்பளித்து அவர்களது ஊழியத்தின் வாயிலாக அனேகமாயிரம் மக்களை பரலோகத்திற்கு நேராக வழிநடத்த வல்லமையுள்ளது. இதை உணர்ந்தவர்களாய், ஊக்கமாக ஜெபிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். வேதம் இவ்வாறு கூறுகிறது:

விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். மாற்கு 13:33
சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள். லூக்கா 18:1
சீஷர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும்
தரித்திருந்தார்கள். அப் 1:14
ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் ரோமர் 12:12
நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ
அவைகளை பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள் மாற்கு 11:24


சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 26

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-6 பகுதி-1

## 6. அக்பரும் ஜெசுவைட்களும்

### 1. தேடுதலின் ஆவியும் - கிறிஸ்தவர்கள் உட்புகுதலும்

அக்பர் பரந்த மனப்பான்மை கொண்டவர். தம் இளமைப் பருவத்திலேயே மதம் கடந்த அறிஞர்களின் தாக்கம் பெற்றவர். எனவே, அவர் மதங்களை ஒருங்கிணைக்க விரும்பினார். இந்துக்களை அவர் மிகுந்த சகிப்புத்தன்மையுடன் நடத்தினார். உண்மையில், அவர் மதக் கண்ணோட்டத்தில் மிகவும் தாராளமான வராக இருந்தார்; அனைத்து மதங்களின் நற்பண்புகளின் அடிப்படையில் கி.பி.1582ம் ஆண்டில் தீன்-இ-இலாஹி என்ற புதிய மதத்தை உருவாக்க முயன்றார். அம்முயற்சியில் வெற்றி பெற்றிருந்தால், அவர் இன்னும் மறக்கமுடியாத ஆட்சி யாளர் என்ற இடத்தைப் பிடித்திருப்பார். அவர், குடிமக்கள் மீது தனது மதத்தை திணிக்க முயற்சி செய்யவில்லை. அவரது பெருந்தன்மை, உயர்ந்த மனிதநேயம், உண்மையை நோக்கிய தீராத தேடல் போன்ற நற்குணங்கள், அவர் மற்ற மதங்களில் உள்ள உண்மைகளை நம்புவதற்கு உதவிகரமாய் இருந்தன.

இந்தியாவைப் பொருத்தவரை முகலாயர்கள் வெளிநாட்டினர்தான். ஆனாலும், மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்ததால் மாத்திரமே வெளிநாட்டினரின் ஆட்சியும் மதநம்பிக்கையுடம் தொடர வாய்ப்பு உண்டு. இல்லாவிடில், எந்த மதமும் மறைந்து போக வாய்ப்பு உண்டு. மக்களின் வழக்கத்திலுள்ள மதம், மொழி மற்றும் பண்பாட்டை மாற்றியமைப்பது மிகவும் கடினமானதே. ஆனால், தனிமனித அமைதி மற்றும் சமுதாய அமைதிக்கான மாற்றங்கள் ஏற்பட, புதிய மதங்களும் மார்க்கங்களும் தேவை என்பது ஆட்சியாளர்களின் கருத்தாகும்.

அக்பர், சூ:.பி சிந்தனைகளால் அதிகம் ஈர்க்கப்பட்டிருந்தாலும், முல்லாக்கள் மற்றும் காஜிகளின் அரசியல் தலையீடுகளை அவர் விரும்பவில்லை. கி.பி.1579ம்

ஆண்டில், அவர் ‘மஹ்சர்நாமா’ ஆணையை வெளியிட்டார், அது தவறான ஒரு ஆணையாகும். அதில் அவர், அனைத்து மத விஷயங்களிலும் தாமே உயர்ந்தவர் என்று அறிவித்தார்; இதை உலமாக்கள் மற்றும் காஜிகள் எதிர்த்தனர்.

அக்பர் ஒரு பெரிய தட்டையான கல்லில் மணிக்கணக்கில் அமர்ந்து கடவுள் மற்றும் மதத்தின் மர்மங்களைப் பற்றி சிந்திப்பார். மதங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தில், அவர், கி.பி.1575ல் ஃபதேபூர் சிக்ரியில், ‘இபாதத்-கானா’ என்று அழைக்கப்படும் பிரார்த்தனை மண்டபத்தை கட்டினார். அங்கு, இந்து, இஸ்லாம், ஜோராஸ்ட்ரியனிசம், கிறிஸ்தவம் மற்றும் நாத்திகம் போன்ற பல்வேறு மத-அறிஞர்கள், ஆன்மீகவாதிகள் மற்றும் இறையியலாளர்களை அழைத்து, மதங்கள் மற்றும் ஆன்மீகம் பற்றிய விவாதங்களை நடத்தினார்.

இவ்விவாதங்களின் முடிவு, எல்லா மதங்களும் மனிதரை ஒரே இலக்கை நோக்கி வழிநடத்துகின்றன என்ற கருத்துக்கு அவரை இட்டுச் சென்றது. இபாதத் கானா வின் முக்கிய நோக்கம் மத-குழுக்களின் சச்சரவுகளை விவாதங்கள் மூலம் தீர்த்து வைப்பதாகும். இதற்காக அக்பர், முஸ்லிம் அல்லாதோருக்கு மத சுதந்திரத்தையும் வழங்கினார்.

வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாக, இரு மதத்தினரிடையே பகை ஏற்படக் காரணமான கட்டாய மதமாற்றத்தை தடை செய்வதற்கான விதிகளையும் அக்பர் உருவாக்கினார். அக்பரின் மதக்கொள்கையும், இந்துக்க ளிடம் அவர் நடந்துகொண்ட விதமும், இன-மத சண்டைகள் மற்றும் கசப்புகளை நீக்கி, நல்லெண்ணம் நிறைந்த சூழலை உருவாக்கியது.

கிறிஸ்தவர்கள் உட்புகுதலுக்கு மேத்யு ரிச்சிக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். திருத்தந்தையர் அக்பருக்கு வழங்கிய பொக்ஷங்களில் ஒன்று, பைபிளின் ‘ராயல் ஆம்ஸ்டர்டாம் பாலிகிளாட்.’ இது கி.பி.1569 - 1573 காலகட்டத்தில் தோன்றியது. அதன் 6-தொகுதிகளில், 2-துணைத்தொகுதிகள் பின்னர் சேர்க்கப் பட்டன.

இந்தப் பரிசு அக்பருக்கு வழங்கப்பட்டபோது, அவர் அதிக பாராட்டுகளை தெரிவித்தார், ‘இன்ஜில்’ (நற்செய்தி) எந்த தொகுதியில் உள்ளது? என்று கேட்டார்; அது தெரிவிக்கப்பட்டவுடன், குறிப்பிட்ட தொகுதிக்கு முக்கியத்துவமும் மரியாதையும் தரப்பட்டது.

நற்செய்தி எழுப்பிய கேள்விகளுக்கு அக்பரின் அணுகுமுறை முரண்பட்டது. இயற்கையாகவே, அவரது மனதில் அரசியல் பரிசீலனைகள் முன்னணியில் இருந்தன. அதே நேரத்தில் அவர் முஸ்லீம் நம்பிக்கையில் அதிருப்தி அடைந்து, உண்மையைத் தேடுபவராக இருந்தார்.

அக்பருடனான ஜேசுயிட்களின் தொடர்பு முல்லாக்கள் மற்றும் காஜிக்களால் கண்டிக்கப்பட்டது. ஜேசுயிட்கள் தங்கியிருந்த காலம் முழுவதும் அக்பர் அவர்களுக்கு அனுகூலமாக இருந்தார். அக்பர் போதகர் அக்வாவிவா என்பவரால் ஈர்க்கப்பட்டார். கிறிஸ்தவ மதத்தின் சில கட்டுரைகள், குறிப்பாக தெய்வீகக் கருத்து, ‘இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம்’ ‘கடவுள் ஒருவரே’ ‘ஒன்றில் மூன்று மற்றும் மூன்று’ போன்ற கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டார். எனினும், பிற முஸ்லீம்கள் மற்றும் யூதர்களைப் போலவே தம்

பார்வையில் உறுதியாக இருந்தார். இதனால் வருத்தமடைந்த அக்வாவிவா, ‘‘இயேசுவின் இனிமையான பெயரை இங்கு நாம் கேட்பது அரிது. முஸ்லிம்கள் அவரை தீர்க்கதரிசி மட்டுமே மற்றும் அவர் கடவுளின் மகன் அல்ல என்கிறார்கள். நான் வெளிப்படையாக சொல்கிறேன். அன்னிய நாட்டில் நாம் எப்படி இறைவனின் பாடலைப் பாடுவது?’ என்று எழுதுகிறார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope’s College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் செப்டம்பர் - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 13-09-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 20-09-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 27-09-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **‘‘தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க’’** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**

MOBILE:
9962924900/7871676100
WHATSAPP:
9789914463/7871676100
E-MAIL:
sjddharmaraja@gmail.com
POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME:
DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO:
601071548.
BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE:
IDIB000N122.
BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER:
9789914463
QR CODE
FOR SCANNING
OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D
UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, 1st floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இயற்கைப் பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்தியாவில் பதவியேற்றுள்ள புதிய ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பிளஸ்-2 வரையில் கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்காக... கலந்தாய்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் மூலம் தொழில்-முறைக் கல்வி மற்றும் உயர் கல்வி படிப்புகளில் சேருகிற பிள்ளைகளுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் எஸ்தர் பெரின், ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, ஜோயல், கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) திரு. ஜேக்கப், திருமதி. லீலா டேவிட், திரு. சுகிர்தராஜன், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. ஆபிரகாம் மனோகர், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR. ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. சாராள் மேரி, திருமதி. லைசா ஏசுவடியான், திருமதி. லிஸி லிவிங்ஸ்டன், திருமதி. ஜான்ஸி செல்வின், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரின் குடும்பத்தாருக்காக..

**Ratchippu Tamil Monthly. Registered News Paper.**
**Date of Publication: First week of every month**
**RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.**
**Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.**
**Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th September 2024.**
**Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.**

# செய்தித்துளிகள்

1. வடக்கு ஐரோப்பிய தீவு நாடான ஐஸ்லாந்து, எரிமலை வெடிப்புகளால் பாதிக்கப்படும் நாடாகும். இந்நிலையில், அங்கு கடந்த 9மாதங்களில் 6முறை எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

2. பத்ம விருதுகள் - 2025 (பத்ம-விபூஷண், பத்ம-பூஷண், பத்மஸ்ரீ) பெறுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரை களை இணையதில் (https://awards.gov.in) செப்15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம் என் ஒன்றிய அரசு அறிவிப்பு.

3. தமிழ்நாடு காவல்துறையின் பெண் காவலர்கள் 1ஆண்டு மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பும்போது 3ஆண்டு கள் தங்கள் சொந்த ஊருக்கு அருகில் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும் என தமிழக அரசு அறிவிப்பு.

4. தினந்தோறும் பல்லாயிரம் மக்கள் கடல் அலைகளைக் கண்டும், கடல் நீரில் குளித்தும் மகிழும் சென்னை பெசன்ட் கடற்கரைக்கு மாற்றுத்திறனாளிகளும் செல்ல வசதியாக மரப்பலகைப் பாதை அமைக்கும் பணி தொடங்கியது.

5. சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின், ஹாக்கி அணிகளுக் கான புதிய தரவரிசை பட்டியலில், பாரீஸ் ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணி (2848.67 புள்ளிகள்) 2இடங்கள் முன்னேறி 5ம் இடத்தை பிடித்தது.

Posted on: 9th September 2024

To

# ஆசிரியர் தினம்

**நல்வாழ்த்துக்கள்**

அன்பான இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர் கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறை மக்கள் ஆகிய உங்களில் ஆசிரியப்பணியிலுள்ள அனைவ ருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த

**ஆசிரியர் தினம்-2024**
**நல்வாழ்த்துக்கள்.**

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்




If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.